**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006.**
**மே / ஜூன் 2025, தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு**
**ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் / தனித் தேர்வர்களின் தேர்வு முடிவுகள் வெளியிடுதல் மற்றும்**
**விடைத்தாட்களின் ஒளி நகல் (Scan Copy) கோரி விண்ணப்பிக்கும் வழிமுறைகள் குறித்தான**

# செய்திக்குறிப்பு

நடைபெற்ற மே / ஜூன் 2025 தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வெழுதிய முதலாமாண்டு / இரண்டாமாண்டு ஆசிரியர் கல்வி பயிற்சி மாணவர்கள், அவரவர் பயின்ற ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களிலும் தனித் தேர்வர்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்த மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களிலும் 15.10.2025 **அன்று பிற்பகல் 03.00 மணி முதல்** தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

மேற்படி மாணவ / மாணவியர்கள் தங்களது விடைத்தாட்களின் **ஒளி நகல் (Scan Copy)** பெற விண்ணப்பிக்க விரும்பினால் www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரியில் DEE EXAM MAY / JUNE 2025 – Scan Copy என்ற வாசகத்தினை Click செய்தால் அதில் தோன்றும் பக்கத்தில் உள்ள விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்து கொண்டு அதனை பூர்த்தி செய்து அவ்விண்ணப்பத்துடன் அதில் குறிப்பிட்டுள்ள கட்டணத் தொகையை கீழ்க்குறிப்பிட்டுள்ள நாட்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் நேரடியாக சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

## விண்ணப்பிக்க வேண்டிய நாட்கள்

17.10.2025 அன்று காலை 11.00 மணி முதல்

22.10.2025 அன்று மாலை 05.00 மணி வரை

ஞாயிற்றுக்கிழமை தவிர ( 19.10.2025)

**தபால் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

விடைத்தாட்களின் ஒளிநகல் (Scan Copy) வேண்டி விண்ணப்பித்த தேர்வர்கள் மட்டுமே பின்னர் மறுகூட்டல் (Re-Totalling), மறுமதிப்பீடு (REVALUATION)–க்கு விண்ணப்பிக்க இயலும் எனவும், அதற்கான அறிவிக்கை பின்னர் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

..2..

**கட்டணம் மற்றும் கட்டணம் செலுத்தும் வழிமுறைகள்**

| வ. எண் | தேர்வர் வகை | கட்டணம் | கட்டணம் செலுத்தும் இடம் |
|---|---|---|---|
| 1. | விடைத்தாள் ஒளி நகல் வேண்டி விண்ணப்பிப்பவர்கள் | ரூ.275/- (ஒரு பாடத்திற்கு) | தேர்வர்கள் வசிக்கும் மாவட்டத்திற்கு அருகில் அமைந்திருக்கும் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் உரிய கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்கலாம். |

**ஒம்/-**
**இயக்குநர்**

**இடம் : சென்னை-6**
**நாள் : 14 .10.2025**